# கலித்தொகையில் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்

**முனைவர் அ. அமல அருள் அரசி**
உதவிப் பேராசிரியர்
தூயமரியன்னை கல்லூரி (தன்னாட்சி)
தூத்துக்குடி

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

## முன்னுரை

சங்ககால மக்கள் தாங்கள் வாழ்ந்த நில அமைப்பிற்கேற்ப பழக்க வழக்கங்களையும் உளபாங்கிற்கேற்ப நம்பிக்கைகளையும் மேற்கொண்டிருந்தனர். 'பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் சமுதாயத்தின் தேவையின் அடிப்படையில் தோன்றியவையாகும். நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் பண்பாட்டு வளர்ச்சியின் படிக்கற்கள்.'[1] தமிழரின் வாழ்வியலை அவர்தம் பழக்கவழக்கங்களே வெளிப்படுத்துகின்றன. மனிதன் தற்செயலாகச் செய்யத்தொடங்கிய ஒன்றை தனது அனுபவத்தின்மூலம் சிறந்தது என்று உணரும்போது அதனை பழக்கப்படுத்திக் கொள்கின்றான். பின் அதுவே சமுதாயத்திற்குரிய பொதுவான தொன்றாக நிலைபெறுகின்றது. தான் கற்றுக் கொண்டதும் கற்றுக்கொள்ள வேண்டியதுமான ஒழுக்கக் கூறுகளைப் பழக்கப்படுத்திக் கொள்ளும் போது வாழ்வு செம்மையுறுகின்றது. மனித ஒழுக்க நெறிகளில் முதன்மையாகக் கருதப்படுவது பழக்கவழக்கங்களே.

கலித்தொகையில் கோலம் புனைதல், வெண்ணெய் பூசுதல், தைநீராடல், வழிபாடு, ஏறு தழுவுதல், திருமணம், கலைத்திறக் கட்டில், கண்ணேணியும் தினைப்புனமும், புலியின் பயன் கொளல், வண்ணம் பூசலும் தோலுறையும், புழங்கு பொருட்கள், தேர்ஒலி, பனை ஓலை குடைகள், குருகொலியொத்த மணியொலி என்று வழிபாடு, தொழில், கலை சார்ந்த அனைத்து பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் இயற்கை சார்ந்தனவாக அமைந்து நாகரிகச் சிறப்பினை எடுத்துரைப்பனவாக உள்ளன. இவற்றை ஆராய்ந்து உரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கோலம் புனைதல்

கலித்தொகையில் பெண்களும் ஆடவரும் கோலம் புனைந்துள்ளனர். காடு, மலை, நீர்நிலை என்று வெவ்வேறு இடங்களிலுள்ள பல்வகை வண்ண பூக்களால் கட்டிய மாலைகளைச் சூடியும்நறிய சந்தனத்தினைப் பூசியும் முத்துகளாலாகிய அணிகலன்களை அணிந்தும் தங்களை அழகுபடுத்தியுள்ளனர்.

ஒத்த இதழாற்கட்டின கோதையையுடையாள். (கலி.52:8) நறிய சந்தனம் தங்கண் மெய்ப்படுப்பார்க்குப் பயன்கொடுத்தலல்லது மலையிடையே பிறந்தனவாயினும் அச்சந்தனம் அம்மலைக்கு என்ன பயன் கொடுக்கும். (கலி.9:12-13) தலைமை பொருந்திய வெள்ளிய முத்துகள் அணிவார்க்குப் பயன்படுவதல்லது கடலிடத்தே பிறந்தனவாயினும் அம்முத்துகளால் கடலுக்கு என்ன பயன். (கலி.9:15-16) என்னும் பாடற் கருத்துகள் மலர்மாலை அணிதல், சந்தனம் பூசுதல், முத்து அணிகலன்கள் அணிதல் போன்ற உடலுக்கு நன்மை பயக்கும் இயற்கையான பொருட்களைக்கொண்டு தங்களை அழகுபடுத்தியுள்ளமையை உணர்த்துகின்றன.

**“மெல்லிணர்க் கொன்றையும் மென்மலர்க் காயாவும்**
**புல்லிலை வெட்சியும் பிடவுந் தளவும்**
**குல்லையுங் குருந்துங் கோடலும் பாங்கருங்**
**கல்லவுங் கடத்தவுங் கமழ்கண்ணி மலைந்தனர்” (கலி.103:1-9)**

என்று ஆயர் மகளிர் வகைவகையான வாசனை மலர்களைச் சூடி, ஏறு தழுவுதலைக் காணவேண்டி பரணை வந்தடைந்தமை கூறப்பட்டுள்ளது. இங்கு நறுமண மலர்களைச் சூடியுள்ளமை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆடவர் தலைமாலையும் மார்பிடத்து மாலையும் அணியும் வழக்கம் இருந்துள்ளது. வெவ்வேறு வண்ணங்களையுடைய பல்வேறு மலர்களைப் பயன்படுத்தி கட்டப்பட்ட மாலைகளாக அவை இருந்துள்ளன.

தாமரைப் பூவாற்செய்த கண்ணியை உடையையாய்த் தண்ணிய நறிய சந்தனத்தை உடையையாய் என்று தோழி தலைவனை அழைக்கிறாள். (கலி.52:7) மழையைப்பெறுகின்ற குளிர்ந்த நிலத்தே நின்ற கார் காலத்துக்கு முற்பட்ட மழைக்கு அரும்பீனா நின்று, முன்பு உலர்ந்த முதலிடத்தே தழைத்த, முள்ளை புறத்தே உடைய பிடவம் பூவும், கள்ளுண்டு களித்தலுற்றவன் நிலைமைபோல அசைந்து வளைந்து துடுப்புபோலும் முகையை முன்னர் ஈன்று, பின்னர் தீயைக்கடைந்து அதிற்பறந்த நெருப்பைச் சேர நிரைத்தாற்போன்ற அலர்ந்த இதழினையுடைய செங்காந்தட்பூவும் நீலமணியை ஒக்கும் நிறத்தினை உடையவாகிய காயாம் பூக்களும், பிறவும் அழகு கொள்ளும்படி சூடிய கண்ணியையுடையவர் ஏறுகளோடு தொழுவிடத்தே புகுந்தார்.(கலி.101:1-6)

**“அரிநீ ரவிழ்நீலம் அல்லி அனிச்சம்**
**புரிநெகிழ் முல்லை நறவோ டமைந்தத்**
**தெரிமலர்க் கண்ணியுந் தாரும் நயந்தார்” (கலி.91:1-3)**

காயாம் பூவாற் செய்த கண்ணியையும் துவரூட்டின கரிய ஆடையையுமுடையாய், மேய்கின்ற நிரைகளுக்கு முன்னே ஒரு கோலை ஊன்றி அந்நிரை மேய்த்து நின்ற ஆயர்குலத்தவனான நீ (கலி.108:9-11) என்றும் ஆடவர் மார்பிடத்து மாலையும், தலைமாலையும் அணிந்திருந்தமை பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**வெண்ணெய் பூசுதல்**

கூந்தலுக்கு நெய் பூசுதல் கூந்தலை ஐவகையாக முடித்தல் போன்ற கோலங்கள் செய்தனர். ஐவகைப்பட்ட கூந்தலை தான் ஆற்றியபோது அது வெண்ணையின் நாற்றம் நீங்கிச் சிறிய முல்லைப்பூவின் நாற்றம்மிக நாறியது. (கலி.105:54-55) செவிலித்தாய் வெண்ணெய் தேய்க்க விரித்த மயிர். (கலி.115:7)

**“நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன**
**ஐவகை பாராட்டினாய் மற்றெங் கூந்தற்**
**செய்வினை பாராட்டினையோ ஐய” (கலி.22:12-14)**

என்னும் பதிவுகளின் மூலம் வெண்ணெயைக் கூந்தலில் தடவிக்கொள்ளுதல் ஆயர் குலத்து மகளிர்க்கு வழக்கமாக இருந்துள்ளது என்பதை அறியமுடிகின்றது.

**தைநீராடல்**

தைநீராடுதல் என்பது மணமாகாத மகளிர் தமக்கு சிறந்த கணவர் கிடைத்தற்பொருட்டு மார்கழி முழுமதிநாள் தொடங்கித் தைத்திங்களில் முடிக்கும் ஒரு நோன்பு. இந்நோன்பின் போது மகளிர் அதிகாலையில் நீராடி இறைவனைத் தொழுவது வழக்கம்.

**“வையெயிற்றவர் நாப்பண் வகையணிப் பொலிந்துநீ**
**தையில் நீராடிய தவந்தலைப் படுவாயோ” (கலி.59:12-13)**

என்பது மணமாகாத மகளிர் தைநீராடி நோன்பு மேற்கொண்டமைக்குச் சான்றாக உள்ளது.

**வழிபாடு**

ஆய்ச்சியானவள் தெய்வத்திற்குப் பலியாகப் பால் செலுத்தியமை இடம்பெற்றுள்ளது. இதனை

**“படையிடுவான்மன் கண்டீர் காமன் மடையடும்**
**பாலொடு கோட்டம் புகின்” (கலி.109:19-20)**

என்று ஆயர் தம் குலத்தின் மூலப்பொருளான பாலினைக்கொண்டு தெய்வத்தை வழிபட்டமை குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஏறுதழுவுதல்**

முல்லை நிலத்து ஆடவர் ஏற்றினை அடக்கி தனக்குரிய மகளிரைத் தேர்ந்தெடுத்து திருமணம் செய்துகொள்ளும் முறைமை ஏறுதழுவுதல் எனப்படும்.

முல்லைத்திணை மக்களாகிய ஆயர்களில் ஏற்றினைத் தழுவி அடக்கியவனுக்கு இவள் உரியவள் என்னும் குறிக்கோளுடன் ஏறு வளர்த்துள்ளவரும், அவ்வேறுகளைத் தழுவி ஆயர் மகளிரை மணத்தற்குத் துணிந்த இளைஞராகிய ஆயர்களும் ஏறுகளோடு அவற்றைத் தழுவுதற்குரிய இடத்திற் போய்க் கூடும் நிகழ்ச்சி கலித்தொகையில் இடம்பெற்றுள்ளது.

**“அணிகொள மலைந்த கண்ணியர் தொகுபுடன்**
**மாறெதிர் கொண்டதம் மைந்துடன் நிறுமார்**
**சீறரு முன்பினோன் கணிச்சிபோற் கோடுசீஇ**
**யேறுதொழூஉப் புகுந்தனர் இயைபுட னொருங்கு” (கலி.101:7-9)**

பாங்கன் தலைவனிடத்து,புகழ்ச்சியையுடைய நல்ல ஏற்றைத் தழுவுமவரல்லது அழகினையுடைய மாந்தளிர்போலும் நிறத்தையுடைய தலைவியின் மெய்யைச்சேராரென்று எல்லாருங் கேட்டிருப்ப இதுகாரிமாகப் பலகாலுஞ் சாற்றிச் சாற்றி எப்பொழுதுஞ் சொல்லிய சொல்லாலே அடிப்படக் கொண்டுவரப்பட்டவள் இத்தலைவி என்று கூறுகின்றான். அதுகேட்ட தலைவன் அச்சுற்றத்தை நோக்கி இவன் ஏறு தழுவி இவளைக் கொள்வனென்று அவர்க்குக் கூறுக என்கின்றான். அவரும் ஆண்டுச்சென்று தழுவுதற்கு யாங்கள் தாழ்த்திரேமென்றார். அது கேட்ட அவள் சுற்றத்தார் மாட்சிமைப்பட்ட இழையினையுடையாள் வழியாக நிகழ்த்தும் ஏறுவிடுகின்ற விழாவைப் பரக்கச் செலுத்தி இவனேயன்றி மற்றும் ஏறுதழுவார் உளராயினும் வருகவென்று பறையறைக என்றார்.(கலி.102:9-14)

**“கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்**
**புல்லாளே ஆயமகள்” (கலி.103:63-64)**
**“ஆங்கினித்**
**தண்ணுமைப்பாணி தளரா தெமூஉக**
**பண்ணமையின்சீர்க் குரவையுள் தெண்கண்ணித்**
**திண்டோள் திறலொளி மாயப்போர் மாமேனி**
**அந்துவராடைப் பொதுவனோடாய்ந்த**
**முறுவலாள் மென்றோள் பாராட்டிச் சிறுகுடி**
**மன்றம் பரந்த துரை” (கலி.102:34-39)**

என்னும் பதிவுகள் ஏறுதழுவி மணம்புரியும் வழக்கத்தைக் கூறுவனவாக உள்ளன. ஏறுதழுவி வெற்றி பெற்றவனுக்கும் அவனைத் திருமணம் செய்யும் தகுதிக்குரிய ஆய்மகளுக்கும் வெற்றிவிழாக் கொண்டாடி குரவைக்கூத்து நிகழ்த்தும் வழக்கமும் இருந்துள்ளது.

**திருமண காலம்**

குறிஞ்சி நிலத்தவர் வேங்கை மலர்கின்ற காலத்து திருமணம் செய்வது வழக்கம். இதனை,

**“நின்னுறு விழுமங் கூறக்கேட்டு**
**வருமே தோழி நன்மலைநாடன்**
**வேங்கை விரிவிட நோக்கி**
**வீங்கிறைப் பணைத்தோள் வரைந்தனன் கொளற்கே” (கலி.38:23-26)**

என்னும் வரிகள் பதிவுசெய்கின்றன.

**கலைத்திறமிக்க கட்டில்**

இயற்கை நலமும் கலை நுணுக்கமும்கொண்ட பொருட்கள் நாகரிகத்தின் வெளிப்பாடாக அமைந்துள்ளன.

**"நலம்பெறு சுடர்நுதா லெம்மொடு நீவரி**
**னிலங்குமா ணவிர்தூவி யன்னமென் சேக்கையுட்**
**டுலங்குமான் மேலூர்தித் துயிலேற்பாய் மற்றாண்டை**
**விலங்குமான் குரல்கேட்பின் வெருவுவை யல்லையோ" (கலி.13:14-17)**

நீலப்பட்டாற்செய்த மெல்லிய படுக்கையிடத்துக் கிடந்த, துணையோடே கூடிய அன்னத்தின் துவியாற் செய்த மெல்லிய மெத்தை (கலி.72:1-2) என்று நீலப்பட்டாலான மெல்லிய படுக்கையிடத்து அன்னத்துவியால் செய்த மெத்தையில் சிங்கம் சுமந்தது போன்ற படுக்கைக் கட்டிலில் துயின்றமை குறிப்பிடப்பட்டுள்ளது.

**கண்ணேணியும் தினைப்புனமும்**

இயற்கையான மூங்கிலிடத்து அதிகமான வேலைப்பாடுகளின்றி அதன் கணுக்களையே கால்வைத்து ஏறி இறங்கும் படிகளாகக் கொண்டு ஏணிகள் அமைத்துள்ளனர்.இதுவே கண்ணேணி எனப்படும். தினைப்புனத்திலிட்ட பரணிடத்து எரித்த அகிலின் புகையாலுண்ணப்பட்டு ஒளி மழுங்கித் திரியும் மதியம் வானிடத்தே சென்று அம்மலைத்தலையிலே தங்கியதால், அதனை அந்த மலையில் வைத்த தேனினது இறாலென்று கருதி, அழித்தற்குக் கண்ணேணி முதலியன அமைத்திருக்கும் காடு அகன்ற நாட்டையுடையவனது மகன்(கலி.39:7-10)என்று அகிற்புகை புகைத்தமையும், கணுக்களிலேயே அடிவைத்து ஏறியிறங்கும்படி அமைத்துள்ள மூங்கிலாலாகிய கண்ணேணிகளைப் பயன்படுத்தியமையும் புலப்படுத்தப்பட்டுள்ளன.

ஒளி விளங்குகின்ற குறைக்கொள்ளியையுடையராய்க் கல்லெறியுங் கவணையுடையராய் வில்லினையுடையராய்க் களிறு வந்ததென்று கருதித் தினைப்புனத்தைக் காக்கின்றவர்கள் ஆரவாரிப்பர் (கலி.52:13-14)என்னும் பாடற்கருத்துகளில் தினைப்புனங் காவலின் போது தீக்கொள்ளி, கவண், வில் இவற்றைப் பாதுகாப்பிற்காகவும் விலங்குகள் தினையை அழித்துவிடாமல் காத்தற்காகவும் பயன்படுத்தியுள்ளனர். தினைக்காவலுக்கு இடப்பட்டிருக்கும் பரண்களில் அகிற்புகை மூட்டப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகின்றது.

**வண்ணம்பூசலும் தோலுறையும்**

வில்லின்மீது வண்ணம்பூசி வழித்தல், கையில் தொழில் மாட்சிமைப்பட்ட தோலுறைக் கட்டி அம்புகளைத் தேர்ந்தெடுத்தல் போன்ற பழக்கங்கள் இருந்துள்ளன.

**"நீயே,செய்வினைமருங்கிற் செலவயர்ந் தியாழநின்**
**கைபுனை வல்வின் ஞாணுளர் தீயே" (கலி.7:5-6)**
**"நீயே, வனைமாண் காழகம் வீங்கக் கட்டிப்**
**புனைமாண் மரீஇய வம்பு தெரிதியே" (கலி.7:9-10)**

என்னும் பாடலடிகள் கலையுணர்விலும் சுகாதாரத்திலும் சிறந்து விளங்கியமையினைப் பதிவுசெய்கின்றன.

**புழங்குபொருட்கள்**

"அருங்காட்சியகத்தில் உள்ள பல்வேறு காட்சிக்கூடங்களில் வைக்கப்பட்டுள்ள பொருட்களைக் கொண்டு அப்பொருள்சார்ந்த காலகட்டத்தின் பண்பாட்டையும்,அக்காலகட்டத்தின் வாழ்வியல் முறைகளையும் அறிய இயலும். பொருட்கள் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றன என்பதாலேயே நம்மால் அருங்காட்சியகக்கூடங்களில் அக்காலத்தின் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்யமுடிகின்றது."[2]

கலித்தொகையில், பால்பற்றறச் சீவுதலைச் செய்த கறவைக் கலங்கள் வைத்த உறியோடே தோற்பையிடத்தே கழுவோடே மாடுகட்குப் பிணிவாராமைப் பொருட்டு இருப்புக் கோலைக் காய்ச்சிச்

சுடும் சூட்டுக் கோல்களையும் இட்டுச் சுருக்கிய பைகளையுந்தூக்கி நீள வளர்ந்த கொன்றைக்காயைத் திறந்து உருவாக்கிய இனிய குழலில் உண்டான ஓசையையுமுடையராய் வழுவின சொல்லையுடைய கோவலர் தத்தம் இனமாகிய பசுக்கள் கார்காலத்தோடே தோன்றினபொழுது வரும் மழையாலே நனைந்த தன்மையையுடைய நிலத்திடத்தாராயினார் (கலி.106:1-5) என்னும் பதிவினைக் காணமுடிகின்றது. இவை ஆயர் குலத்தவர் மட்கலம், உறி, தோற்பை, சூட்டுக்கோல், சுருக்குப்பை, கொன்றையங்குழல் போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளமையை உணர்த்துகின்றன.

**தேரும் மணியொலியும்**

பிறருக்கு தீங்கு ஏற்படுத்தாத வகையில் தேரும் தேர் ஒலியும் இருந்துள்ளது. அழகினையுடைத்தாகிய சிறகினையுடைய குருகுகள் இராக்காலத்து ஒருகால் ஒலிக்குமிடத்து நின்னுடைய திண்ணியதேரின் மணியினோசையென்று இவள் மிகவும் துணிந்தனள். (கலி.126:6-7) நின் தேரிலே பூண்ட உயர்ந்த நல்ல குதிரையிற் கட்டின தெளிந்த மணியோசை (கலி.70:18) என்பவை திரை பூட்டிய தேரில் செல்லும் வழக்கம், பறவைகளின் ஒலியையொத்த ஒலியுடைய தேரின் மணி இவை பயன்படுத்தப்பட்டுள்ளமையைப் பதிவுசெய்கின்றன.

**நம்பிக்கைகள்**

‘அறிவு நிலைக்கு அப்பாற்பட்ட எண்ணங்களையே நம்பிக்கைகள் என்பர். நம்பிக்கைகள் பெரும்பாலும் அச்ச உணர்வின் அடிப்படையாகத் தோன்றியதாகக் காட்சியளித்தாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்களை உணராதபொழுதும் மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாதபொழுதும் மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன.’3 தெய்வத்தின் காரணமாக அல்லது தனது தவறின் காரணமாகத் தீமை நடந்துவிடும் என்னும் அச்சத்தின் விளைவாக மக்களால் உருவாக்கப்பட்டுக் கடைபிடிக்கப்படுபவையே நம்பிக்கைகள். இவை நன்மையின் மீதான விருப்பு தீமையின் மீதான வெறுப்பு இவற்றின் அடிப்படையில் உருவாகக்கூடியவை. இந்நம்பிக்கைகள் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களின்போது மனம் சிதைந்துவிடாமல் காத்து அவற்றிலிருந்து மீளமுடியும் என்னும் நம்பிக்கையையும் ஆறுதலையும் வழங்குகின்றன.

கலித்தொகையில் பல்லி நல்லிடத்து ஒலித்தல், மகளிரின் இடதுகண் துடித்தல், குழலோசை கேட்டல் இவற்றால் நல்லது நடக்கும், அறமல்லன செய்யின் ஐம்பூதங்களும் நலன் நல்காது, கணவனே கண்கண்ட தெய்வமென வாழும் மகளிரின் தமையன்மார் செலுத்தும் அம்பு குறிதவறாது செல்லும், நீர்த்துறையிடத்தும், மலையிடத்தும், ஆலமரம், மாமரம், கடப்பமரம் இவற்றிலும் தெய்வம் உறைந்துள்ளது என்னும் நம்பிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

**பல்லி ஒலித்தலும், கண் துடித்தலும், குழலோசையும்**

தம்மை அருள் பண்ணிவந்த அந்தணர், தாபதர் முதலியோர்க்குப் பெறுதற்கரியதாய் அறஞ்செய்தலைப்பொருந்தி வேண்டுவன கொடுத்தலும், பெரிதாய பகைகளையெல்லாம் வென்ற அச் செருக்கினாற்தம்மை வழிபடாதாரை அழித்தலும் வல்ல பொருளைத்தேடி, தலைவியைப் பிரிந்து சென்ற தலைவனது வரவுக்கு, நம்மனையிடத்துப் பல்லியும் நன்றாகிய இடத்தே பொருந்திக் கூறின, நல்ல அழகையுடைய மையுண்ட இடதுகண்ணும் துடித்துநின்றது. (கலி.11:10) தோழி, தலைவியிடம் ஆயர் ஈண்டு ஊதுகின்ற குழல் நீலமணிபோலும் காயாம் பூவாற் செய்த மாலையினை அணியும் இயல்பினையுடைய கேள்வனை நமக்குத் தருதற்கு நன்னிமித்தமாக இசைத்ததுகாண் என்கின்றாள். (கலி.101:34-35) இவைபல்லி நல்லிடத்திருந்து ஒலிஎழுப்புதல், மகளிரின் இடதுகண் துடித்தல், ஆயர் குழல் ஊதல் போன்றவை நல்ல நிமித்தங்களாகக் கருதப்பட்டு நற்பலன் கிடைக்கும் என்று நம்பப்பட்டன.

**ஐம்பூதங்களின் நலன்**

அறச்செயல்களைச் செய்யத் தவறும்போது நிலம் தன் வளங்களை நல்காது என்று நம்பினர். நீராடலின்போது அடித்துச் செல்லப்பட்ட தலைவியைக் காப்பாற்றியவன் தலைவன். இங்ஙனம் உதவிய தலைவனுக்கு தலைவியைத் திருமணம் செய்து வைக்காது பிற ஆடவனுக்குத் திருமணம் செய்து வைக்கக் கருதி அறமல்லாதவற்றைச் செய்யக் கருதினால்,

**“வள்ளிகீழ் வீழா வரைமசை தேன் தொடா**
**கொல்லை குரல் வாங்கி ஈனாமலை வாழ்நர்**
**அல்ல புரிந்தொழுகலான்” (கலி.39:12-14)**

என்னும் தோழிக்கூற்றின் வாயிலாக, தீவினை நயந்து செய்வோர் நாட்டில் நிலம் முதலிய ஐம்பூதங்களும் தத்தம் நலன்களை நல்கமாட்டா என்று நம்பினர்.

**குறிதவறாத அம்பு**

மகளிர் தன் கணவனே தெய்வமென்று வணங்கி வாழ்ந்தால் தலைவியின் தமையன்மார் தொடுத்த அம்பு குறிதவறாது செல்லும் என்னும் நம்பிக்கை இருந்துள்ளது.

**“காந்தள் கடிகமழுங் கண்வாங்கி இருஞ்சிலம்பின்**
**வாங்கமை மென்றோட் குறவர் மடமகளிர்**
**தாம் பிழையார் கேள்வர்த் தொழுதெழலாற் றம்மையருந்**
**தாம்பிழையார் தாந்தொடுத்தகோல்” (கலி39:15-18)**

தொழில் செம்மையுற மகளிர் ஒழுக்கந் தவறாது வாழவேண்டும் என்று நம்பினர்.

**தெய்வம் உறையும் இடங்கள்**

நீர், மலை, மரம்இவற்றில் தெய்வம் உறைந்திருப்பதாக நம்பிக்கைக் கொண்டு அவற்றை வழிபட்டனர். மழை முழக்கென்ன, இடியென்ன நடுவானநிலத்தின் முன்னே ஆரவாரமெழப் புகை யொடு துகழ்எழ, ஏறுதழுவினார்க்குக் கொடுத்தற்கு நல்ல மகளிர் திரண்டு நிற்ப, நீர்த்துறையிலும் ஆலமரத்தின் கீழும் பழைய வலியினையுடைய மாமரத்தின் கீழும் உறையும்தெய்வங்கட்குச் செய்யும் முறைமைகளைப் பரவி தொழுவிலே பாய்ந்தார். (கலி.101:10-14) ஏறு தழுவுதலின்போது அவ்வேறுகள் தம்முடைய அழகு செய்கின்ற கொம்பாலே தோண்டிய குடர்கள் நான்று விழும்படி எடுத்துக்கொண்டு உயர்ந்துபோம் பருந்தின் வாயினின்றுந் தப்பி, ஆலமரத்தையுங் கடப்ப மரத்தையும் ஆண்டு உறையுந் தெய்வங்கட்கு மகிழ்ச்சி உண்டாக வேண்டி அணிதலைச் செய்தற்கு, மாட்டி இட்டுவைத்த மாலைகள் போல கொம்புகள் தோறும் தூங்கா நிற்கும். (கலி.106:26-29) தோழியானவள் தலைவனிடம், தலைவி செய்த குறியிடத்தே நீ வருவையாயின், மணம் நாறுகின்ற நாற்றத்தையுடைய மலைக்கண்ணே நின்று, பலியைக் கொள்ளும் அணங்குகளிலே ஓர் அணங்கென்று கருதிச் சிறு குடியிலுள்ளோர் அஞ்சுவர் (கலி.52:8-10)என்னும் செய்திகள் ஆலமரம், கடப்பமரம், மாமரம் இவை தெய்வம் உறையும் மரங்களாகக் கருதப்பட்டு அவற்றிற்கு மாலை அணியும் வழக்கமும் இருந்துள்ளது என்பதை உணர்த்துகின்றன.

**முடிவுகள்**

1. காடு, மலை, நீர்நிலை என்று வெவ்வேறு இடங்களிலுள்ள பல்வகை வண்ண பூக்களால் கட்டிய மாலைகளைச் சூடியும் நறிய சந்தனத்தினைப் பூசியும் முத்துகளாலாகிய அணிகலன்களை அணிந்தும் தங்களை அழகுபடுத்தியுள்ளனர்.
2. கூந்தலுக்கு வெண்ணெய் பூசுதல், கூந்தலை ஐவகையாக முடித்தல் போன்ற கோலங்கள் செய்துள்ளனர்.
3. மணமாகாத மகளிர் தமக்கு சிறந்த கணவர் கிடைத்தற் பொருட்டு நோன்பு மேற்கொண்டுள்ளனர்.
4. ஆய்ச்சியர் தெய்வத்திற்குப் பாலினைபலிசெலுத்தியுள்ளனர்.
5. முல்லை நிலத்து ஆடவர் ஏறுதழுவி மகளிரைத் திருமணம் செய்துள்ளனர்.
6. ஏறுதழுவி வெற்றி பெற்றவனுக்கும் அவனைத் திருமணம் செய்யும் தகுதிக்குரிய ஆயகுலமகளுக்கும் வெற்றிவிழா கொண்டாடி குரவைக்கூத்து நிகழ்த்தும் வழக்கம் இருந்துள்ளது.
7. குறிஞ்சி நிலத்தவர் வேங்கை மலர்கின்ற காலத்து திருமணம் செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.
8. நீலப்பட்டாற்செய்த மெல்லிய படுக்கையிடத்து அன்னத்துவியால் செய்த மெத்தையில் சிங்கம் சுமந்தது போன்ற படுக்கைக் கட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.
9. மூங்கிலாலாகிய கண்ணேணிகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

10. வலைவிரித்து புலியினைப் பிடித்து அதன் பயனைக் கொள்வது வழக்கமாக இருந்துள்ளது.
11. வில்லின்மீது வண்ணம்பூசி வழித்தல், கையில் தொழில் மாட்சிமைப்பட்ட தோலுறைக் கட்டி அம்புகளைத் தேர்ந்தெடுத்தல் போன்ற பழக்கங்கள் இருந்துள்ளன.
12. மட்கலம், உறி, தோற்பை, சூட்டுக்கோல், சுருக்குப்பை, கொன்றையங்குழல் போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளமை பதிவுசெய்யப்பட்டுள்ளது.
13. குதிரைப்பூட்டிய தேரில் செல்லும் வழக்கம், பறவைகளின் ஒலியையொத்த ஒலியுடைய தேரின் மணி இவை பயன்படுத்தப்பட்டுள்ள.
14. பல்லி நல்லிடத்திருந்து ஒலிஎழுப்புதல், மகளிரின் இடதுகண் துடித்தல், ஆயர் குழல் ஊதல் போன்றவை நல்ல நிமித்தங்களாகக் கருதப்பட்டுள்ளன.
15. அறச்செயல்களைச் செய்யத் தவறும்போது நிலம் தன் வளங்களை நல்காது என்று நம்பினர்.
16. மகளிர் தன் கணவனே தெய்வமென்று வணங்கி வாழ்ந்தால் தலைவியின் தமையன்மார் தொடுத்த அம்பு குறிதவறாது செல்லும் என்னும் நம்பிக்கை இருந்துள்ளது.
17. நீர், மலை, மரம் இவற்றில் தெய்வம் உறைந்திருப்பதாக நம்பிக்கைகொண்டு அவற்றை வழிபட்டுள்ளனர்.

**குறிப்புகள்**

1. சக்திவேல்,சு, நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2001. ப.188
2. பக்தவத்சல பாரதி, தமிழர் மானிடவியல், அடையாளம், திருச்சி, 2015, பக்.323-324
3. சக்திவேல்,சு, நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2001,பக்.188-189
4. பக்தவத்சல பாரதி, பண்பாட்டுமானிடவியல், அடையாளம், திருச்சி, மூ.ப.2017, ப.15.